முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 14 - கத்தோலிக்க திருமறை

### புள்ளித்திட்டம்



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

# கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 14 - கத்தோலிக்க திருமறை

## புள்ளிகளைப் பகிர்ந்தளிக்கும் முறை

I **வினாப்பத்திரம்**

பல்தேர்வு வினாக்கள் 01 – 40 = 01 x 40 = 40 புள்ளிகள்

II **வினாப்பத்திரம்**

**1ம் வினா ( கட்டாயமானது )**

01 – 10 = 02 x 10 = 20 புள்ளிகள்

**(2 - 7 வரை தெரிவு செய்த வினாக்கள் 04)**

**2 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 03
III. பகுதி புள்ளிகள் 05 = 10 புள்ளிகள்

**3 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 03
III. பகுதி புள்ளிகள் 05 = 10 புள்ளிகள்

**4 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 03
III. பகுதி புள்ளிகள் 05 = 10 புள்ளிகள்

**5 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 03
III. பகுதி புள்ளிகள் 05 = 10 புள்ளிகள்

**6 வினா**

I. பகுதி புள்ளிகள் 02
II. பகுதி புள்ளிகள் 03
III. பகுதி புள்ளிகள் 05 = 10 புள்ளிகள்

**7 வினா சிறு குறிப்பு இரண்டிற்கு**

05 + 05 = 10 புள்ளிகள்

**மொத்தம்** 04 x 10 = 40 **புள்ளிகள்**

**இறுதிப்புள்ளி**

**(வினாப்பத்திரம்** I = 40 **புள்ளிகள் + வினாப்பத்திரம்** II = 60 **புள்ளிகள்)** **100 புள்ளிகள்**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................... ✓ △ $\frac{4}{5}$
...........................................................................
...........................................................................

(ii) ........................................................................... ✓ △ $\frac{3}{5}$
...........................................................................
...........................................................................

(iii) ........................................................................... ✓ △ $\frac{3}{5}$
...........................................................................
...........................................................................

**மொத்தம்** ⟶ □ $\frac{10}{15}$

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.
II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.
III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**
IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.
V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**
V. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.
II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

OL/2020/14-T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது ]All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

කතෝලික ධර්මය **I, II**
**கத்தோலிக்கத் திருமறை I, II**
Catholicism **I, II**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## கத்தோலிக்கத் திருமறை I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை ( × ) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** கிறிஸ்தவர்களின் அதிமேன்மையான புனித நூலாகிய திருவிவிலியத்தில் அடங்கியுள்ள நூல்களின் எண்ணிக்கை
(1) 46 ஆகும். (2) 70 ஆகும். (3) 72 ஆகும். (4) 73 ஆகும்.

**2.** 'தெயோபில்' என்ற பெயரின் அர்த்தம் என்ன?
(1) பெரிய மறைத்தூதுவன் (2) சித்திரக் கலைஞன்
(3) நெருங்கிய நண்பன் (4) ஆண்டவரின் நண்பன்

**3.** சிமியோனின் புகழ்ச்சிப்பாடல் பாடப்படுவது எவ்வேளை திருப்புகழ்மாலையிலாகும்?
(1) காலை (2) நண்பகல்
(3) மாலை (4) இரவு

**4.** ஆரம்பத் திருச்சபையில் பின்வரும் எவ்விடயம் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது?
(1) திருத்தூதர்களின் கற்பித்தல் (2) பந்தி பரிமாறும் பணி
(3) நட்புறவு (4) செபித்தல்

**5.** விசேட தூதுரைப்பணியாளனான புனித பவுலை அறிமுகம் செய்யும் பெயரைத் தெரிவுசெய்க.
(1) பிற இனத்தாரின் திருத்தூதர் (2) தமஸ்குவின் திருத்தூதர்
(3) மறைத் தூதுவர்களின் திருத்தூதர் (4) உரோமையின் திருத்தூதர்

**6.** "உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்." எனக் கூறியவர் யார்?
(1) புனித யாக்கோபு (2) புனித யோவான் (3) புனித பேதுரு (4) புனித பவுல்

**7.** திருச்சபை பரிசுத்தமாயிருப்பது
(1) புனித நகரில் ஆரம்பிக்கப்பட்டதனால் ஆகும்.
(2) திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனால் ஆகும்.
(3) உலகெங்கும் பரவியிருப்பதனால் ஆகும்.
(4) மூவொரு கடவுளுடன் கொண்டுள்ள உறவினால் ஆகும்.



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**8.** "எவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதனையுமே அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது." இவ்வாறு கூறியவர் யார்?
(1) திருத்தந்தை I ஆம் அருளப்பர் சின்னப்பராகும்.
(2) தூய யோசப்வாஸ் அடிகளாராகும்.
(3) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாராகும்.
(4) தூய திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பராகும்.

**9.** தூய நற்கருணையின் சிறப்பியல்புகள் இரண்டு அடங்கும் விடையைத் தெரிவுசெய்க.
(1) பலி, செபம் (2) உடன்படிக்கை, வேண்டுதல்
(3) நன்றி கூறுதல், நினைவுகூருதல் (4) உணவு, விண்ணப்பம்

**10.** யூத பாஸ்கா உணவில் முக்கியத்துவம் பெற்றவை மூன்று,
(1) பாஸ்கா செம்மறி, கசப்புக்கீரை, திராட்சை இரசம்
(2) புளியாத அப்பம், கசப்புக்கீரை, கோதுமை அப்பம்
(3) திராட்சை இரசம், கோதுமை அப்பம், கசப்புக்கீரை
(4) பாஸ்கா செம்மறி, புளியாத அப்பம், கோதுமை அப்பம்

**11.** உடலில் விஷமேற்றிக் கொல்லப்பட்ட அருட்பணியாளர் யார்?
(1) மக்ஸிமிலியன் கோல்பே (2) யாக்கோமே கொன்சால்வேஸ்
(3) மனுவெல் த மிராண்டா (4) மைக்கல் றொட்றிகோ

**12.** 'விசுவாசத்தின் தந்தை' என்னும் விருதைப் பெற்றவரும், இடையருக்குரிய வாழ்க்கை நடாத்தியவருமான நபர் யார்?
(1) புனித பேதுரு (2) செக்கரியாஸ் (3) புனித யூதா (4) ஆபிரகாம்

**13.** பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களை மதித்து அவர்களைப் பராமரிக்க நமக்குப் பணிப்பது, எத்தனையாவது கட்டளையாகும்?
(1) மூன்றாவது (2) நான்காவது (3) ஐந்தாவது (4) ஆறாவது

**14.** நாம் தாய்வயிற்றில் உருவாகுமுன்பே இறைவன் நம்மை அறிந்திருப்பதாக எந்த இறைவாக்கினரின் அழைத்தலின் மூலமாக எடுத்துக் காட்டப்படுகிறது?
(1) ஆமோஸ் (2) நாத்தான் (3) எரேமியா (4) மீக்கா

- பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு **15** ஆம், **16** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A - இணையத்தினூடாக ஆபாச படங்களைப் பார்த்தல்.
B - நேர்மையற்ற முறையில் வாக்குரிமை வழங்குதல்.
C - பொதுச் சொத்துக்களை அழித்தல்.
D - திருமண வாக்குறுதியை மீறல்.
E - நற்பெயரைக் கெடுத்தல்.

**15.** ஆறாவது மற்றும் ஒன்பதாவது இறை கட்டளைகளுக்கு எதிரான செயல்களாவன
(1) A யும் B யும் ஆகும். (2) A யும் D யும் ஆகும்.
(3) B யும் C யும் ஆகும். (4) B யும் E யும் ஆகும்.

**16.** ஏழாவது மற்றும் பத்தாவது இறை கட்டளைகளுக்கு எதிரான செயல்களாவன
(1) B யும் C யும் ஆகும். (2) B யும் E யும் ஆகும்.
(3) C யும் D யும் ஆகும். (4) C யும் E யும் ஆகும்.

**17.** அனனியா மற்றும் சப்பிராவின் சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்தியாவது,
(1) மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துதல். (2) தாழ்மையுடையவராக வாழுதல்.
(3) நேர்மையாகச் செயற்படுதல். (4) ஏழைகள் மீது இரக்கம் காட்டுதல்.

**18.** திருப்பலியில் மறைபரப்புப் பணிக்காக நம்மை வழி அனுப்பி வைப்பது,
(1) மறை உரையின் பின்னராகும். (2) நற்கருணை பெற்றதுடனாகும்.
(3) நற்செய்தியை எடுத்துரைப்பதனாலாகும். (4) இறுதி ஆசீரினாலாகும்.

**19.** இறுதி இரா உணவின் போது இயேசு தமது சீடர்களுடன் செய்த செபம் எது?
(1) நம்பிக்கையாளரின் மன்றாட்டு (2) உன்னத குருவின் வேண்டுதல்
(3) காணிக்கை மீது மன்றாட்டு (4) பரலோக மந்திரம்

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**20.** கெத்சமனித் தோட்டத்தில் செபிப்பதற்கு இயேசு தம்முடன் அழைத்துச் சென்ற சீடர்கள்.
(1) பேதுரு, யோவான், யாக்கோபு ஆகும். (2) மத்தேயு, யோவான், யூதா ஆகும்.
(3) யாக்கோபு, யூதா, மத்தேயு ஆகும். (4) பேதுரு, யோவான், மத்தேயு ஆகும்.

**21.** இஸ்ராயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அழைத்துச் சென்றது பற்றிக் குறிப்பிடப்படுவது
(1) தொடக்க நூலிலாகும் (2) விடுதலைப் பயணம் நூலிலாகும்
(3) நீதிபதிகள் நூலிலாகும் (4) I சாமுவேல் நூலிலாகும்

**22.** கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொண்டுள்ள பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?
(1) 46 ஆகும். (2) 47 ஆகும். (3) 48 ஆகும். (4) 49 ஆகும்.

**23.** இறைவன் மோசேக்குத் தாம் யாரென்பதை அறிமுகம் செய்து வைத்தது.
(1) இஸ்ராயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதன் மூலமாகும்.
(2) குழந்தை மோசேயை மரணத்திலிருந்து காத்ததன் மூலமாகும்.
(3) மோசேக்கு புதுமைகளைச் செய்யும் வல்லமையைக் கொடுத்ததன் மூலமாகும்.
(4) எரியும் முட்செடியின் நடுவே காட்சி கொடுத்ததன் மூலமாகும்.

**24.** சாதாரண இடையருக்குரிய வாழ்க்கை நடாத்திய இஸ்ராயேல் மக்கள் சிறப்பு வாய்ந்த இறைமக்கள் நிலையை அடைந்தது,
(1) விருத்த சேதனத்தின் மூலமாகும்.
(2) செங்கடலைக் கடந்ததன் மூலமாகும்.
(3) சீனாய் உடன்படிக்கையின் மூலமாகும்.
(4) வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியதன் மூலமாகும்.

**25.** திருச்சபை கற்பிப்பதன்படி திருமுழுக்கு யோவான் சென்ம பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது,
(1) மரியா எலிசபெத்தை வாழ்த்திய போதாகும்.
(2) தேவதூதன் செக்கரியாவுக்குக் காட்சிகொடுத்த போதாகும்.
(3) அவருக்கு "யோவான்" எனப் பெயரிட்ட போதாகும்.
(4) அவர் இயேசுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்த போதாகும்.

**26.** இயேசுவின் பகிரங்க வாழ்வும், மறைத்தூதுப் பணியும் ஆரம்பிப்பது,
(1) அவரைக் கோயிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்ததுடனாகும்.
(2) திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றதுடனாகும்.
(3) சாத்தானின் சோதனையை வென்றதுடனாகும்.
(4) கானா ஊரில் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றிய இறைவல்லமை வெளிப்பாட்டினாலாகும்.

**27.** "வாழ்வதென்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும்." இவ்வாறு கூறியவர்,
(1) புனித யோசேப் வாஸ் அடிகளாராகும். (2) புனித அகுஸ்தினாராகும்.
(3) புனித அம்புறோசியாராகும். (4) அசீசியில் புனித பிரான்சிஸ்சாகும்.

**28.** இறையாட்சிக்கு உட்படவெனில் நாம் திருமுழுக்குப் பெறவேண்டும் என்பது உறுதிப்படுத்தப்படுவது, இயேசு யாருக்குக் கூறிய வார்த்தைகளின் மூலமாகும்?
(1) புனித பேதுருவுக்கு (2) நிக்தேமுவுக்கு
(3) புனித திருமுழுக்கு யோவானுக்கு (4) சமாரியப் பெண்ணுக்கு

**29.** பின்வரும் அருளடையாளங்களைக் கவனத்திற்கொள்க.
A - திருமுழுக்கு
B - உறுதிப்பூசுதல்
C - திவ்விய நற்கருணை
D - ஒப்புரவு
E - நோயில் பூசுதல்

மேற்கூறியவற்றில் குணமளிக்கும், மற்றும் சகித்துக்கொள்ளும் சக்தியைப் பெற்றுத்தரும் அருளடையாளங்கள் அடங்கும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) C யும் E யும் (4) D யும் E யும்

**30.** ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் பொதுநிலையினர் மத்தியில் வாழ்ந்து, அவர்களுக்குப் பணிபுரிந்து அவர்களோடு இறைஅரசை நோக்கிப் பயணிக்கத் தம்மை அர்ப்பணித்துள்ளவர்கள்,
(1) துறவற சகோதரர்கள் ஆகும். (2) துறவற சகோதரிகள் ஆகும்.
(3) மறைமாவட்டக் குருக்கள் ஆகும். (4) துறவற குருக்கள் ஆகும்.

Department of Examinations Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**31.** கிறிஸ்தவ திருமணத்தின் சிறப்பான நோக்கம் ஆவது,
(1) இரு பிரிவினரதும் பெற்றோர்களின் பௌதிக தேவைகளை நிறைவு செய்தல்.
(2) குடும்பத்தில் அனைவரும் வாழ ஓர் நிலத்தைப் பணம் கொடுத்து வாங்கி ஓர் வீட்டைக் கட்டுதல்.
(3) அன்னியோன்னிய அன்பால் முழுமை அடைதல்.
(4) ஒவ்வொரு நாளும் ஒருவருக்காக ஒருவர் குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஒதுக்குதல்.

**32.** துறவற வாழ்வின் ஆரம்பகர்த்தாக்களாக குறிப்பிடப்படுபவர்கள்
(1) புனித பக்கோமியோ, புனித அந்தோனியார் ஆகும்.
(2) புனித ஆசீர்வாதப்பர், புனித பக்கோமியோ ஆகும்.
(3) புனித அந்தோனியார், புனித அகுஸ்தினார் ஆகும்.
(4) புனித அகுஸ்தினார், அசீசியில் புனித பிரான்சிஸ் ஆகும்.

**33.** குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உரிய இறைவாக்குப் பணியில் பிரதான தூதுரைப் பணி எது?
(1) மறையை அறிவித்தலாகும். (2) ஏழைகளுக்கு உதவுதலாகும்.
(3) நோயாளருக்கு மருத்துவம் செய்தலாகும். (4) கைம்பெண்களைப் பராமரித்தலாகும்.

**34.** இறைவனால் மனிதனின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்ட படைப்பு அவனது வாழ்க்கைக்குத் தகுந்த இல்லிடமாக அமைவது
(1) பூமி முழுவதும் பரவி அதனை ஆளுதல் மூலமாகும்.
(2) புதிய கண்டுபிடிப்புக்களின் ஊடாக உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமாகும்.
(3) அதனைப் பாதுகாத்துப் பயன்படுத்துவதன் மூலமாகும்.
(4) விலங்குகளைப் போஷித்து அவற்றைப் பல்கிப் பெருகச் செய்வதன் மூலமாகும்.

**35.** உள்ளார்ந்த அமைதியை உருவாக்க
(1) தனது தாய்நாட்டைத் தன்னிறைவு பெறச் செய்யவேண்டும்.
(2) பிரச்சினைகள் சந்தர்ப்பத்தில் அமைதியாக இருக்கவேண்டும்.
(3) யுத்தம் போன்ற வன்செயல்களைத் தவிர்க்கவேண்டும்.
(4) பிறருக்கும் அவர்களது உரிமைகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும்.

**36.** அயலாரை அன்பு செய்வதன் நோக்கம் ஆவது
(1) கடமையை நிறைவேற்றுவதாகும்.
(2) ஏழைகளுக்கு உதவுவதாகும்.
(3) அனைத்தையும் பகிர்ந்து கொள்ளுவதாகும்.
(4) நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ளுவதாகும்.

**37.** ஒரு சந்தி அனுசரிக்க வேண்டிய கட்டாய வயதெல்லை ஆவது
(1) 18 - 60 வயது (2) 18 - 65 வயது (3) 20 - 60 வயது (4) 20 - 65 வயது

**38.** இறை மனித உரையாடலுக்காக இயேசு நமக்கு அளித்த முழுமையான எடுத்துக்காட்டு ஆவது,
(1) மங்கள வார்த்தைச் செபமாகும். (2) கல்லறைச் செபமாகும்.
(3) இயேசு கற்பித்த செபமாகும். (4) உன்னத குருவின் செபமாகும்.

**39.** மரியன்னையின் விண்ணேற்பு நமக்கு முக்கியத்துவம் வாய்ந்தாக அமைவது,
(1) அன்னை விண்ணுலகில் அரசியாக இருப்பதனாலாகும்.
(2) அவள் சென்ம பாவத்திலிருந்து தூய்மையானவளாக இருப்பதனாலாகும்.
(3) அன்னை மீது நமக்குள்ள கௌரவத்தினாலாகும்.
(4) நமது உயிர்ப்பைப் பற்றிய முன்னடையாளமாக இருப்பதனாலாகும்.

**40.** பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்க.
A - வேலைப்பளு காரணமாகக் கிறிஸ்தவ சபைகளைத் தரிசிக்க முடியாமை
B - கால்நடையாகச் செல்லமுடியாமை
C - வயோதிப நிலையை அடைந்தமை
D - சிறைப்பட்டிருந்தமை
E - உதவியாளர்கள் கிடைக்காமை

இவை மத்தியில் புனித பவுல் திருமுகங்களை எழுதுவதில் ஈடுபடக் காரணமாயமைந்த விடயங்கள் மட்டும் உள்ளடங்கியவற்றைத் தெரிவுசெய்க.
(1) A யும் C யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) B யும் E யும்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: 14 | විෂයය / பாடம்: கத்தோலிக்க திருமறை

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 2 | 31. | 3 |
| 02. | 4 | 12. | 4 | 22. | 1 | 32. | 2 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 1 | 35. | 4 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 2 | 36. | 4 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 4 | 39. | 4 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 3 | 40. | 2 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: $\frac{25}{40}$

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: $\frac{25}{40}$


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි ] முழுப் பதிப்புரிமையுடையது ]All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**14 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

| | |
|---|---|
| කතෝලික ධර්මය | I, II |
| **கத்தோலிக்கத் திருமறை** | I, II |
| Catholicism | I, II |

## கத்தோலிக்கத் திருமறை II

※ **முதலாம்** வினாவுக்கும் மேலும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

---

**1.** (i) திருவிவிலியத்தில் வெளிப்பாட்டு இலக்கிய நூல்கள் **இரண்டினையும்** குறிப்பிடுக.

(ii) ஞான இலக்கிய நூல்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) பழைய ஏற்பாடு எரிபலிகளில் **இரு** வகைகளை எழுதுக.

(iv) திருவழிபாட்டின் பிரதான பகுதிகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(v) இயேசு இறுதி இரா உணவின் போது நிறைவேற்றிய **இரு** செயல்களை எழுதுக.

(vi) பஞ்சாகமத்தைக் குறிக்கும் வேறு **இரு** பெயர்களை எழுதுக.

(vii) பாவத்தில் விழுந்த ஏவாளுக்கு இறைவன் கொடுத்த தண்டனைகள் **இரண்டினை** எழுதுக.

(viii) சிறிய இறைவாக்கினர் **இருவரைப்** பெயரிடுக.

(ix) புனித யோவான் நற்செய்தியின் அடையாளத்தைக் குறிப்பிட்டு அதன் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்தையும் எழுதுக.

(x) தொடக்க நூல் 3:6 இன்படி நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் பறித்து உண்பதற்கு பெண் தன்னிடமிருந்த ஆசையை வெளிப்படுத்திக் கூறிய **இரு** விடயங்களை எழுதுக.

**2.** (i) வெளிப்பாடு இலக்கியத்தில் வரும் அடையாளங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) வெளிப்பாடு இலக்கியத்தில் அடையாளங்களாகப் பயன்படுத்தப்படும் நிறக் குறியீடுகள் **மூன்றை** எழுதுக.

(iii) புனித பேதுருவின் வாழ்க்கையிலிருந்து உமது வாழ்க்கைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் **ஐந்தினை** விபரிக்குக.

**3.** (i) திவ்விய நற்கருணை தொடர்பான முன்னடையாளங்கள் **இரண்டு** எழுதுக.

(ii) திருப்பலி நிறைவேற்றுவதன் பிரதான நோக்கங்கள் **மூன்றினை** எழுதுக.

(iii) நற்கருணை உணவினாலும், இறை வார்த்தையாலும் போஷிக்கப்படும் ஒரு குடும்பத்தில் தமது பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள் **ஐந்தினை** விபரிக்குக.

**4.** (i) பரிசுத்த வாரத்தில் பிரதான திருவழிபாட்டு நாட்கள் **இரண்டினை** எழுதுக.

(ii) நத்தார் காலத்தில் கொண்டாடப்படும் பிரதான திருவிழாக்கள் **மூன்றினைப்** பெயரிடுக.

(iii) ஞாயிறு தினத்தைப் புனிதமாக அனுசரிக்க உம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய செயல்கள் **ஐந்தினை** விபரிக்குக.



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**5.** (i) ஆணின் இதயத்தினை நெருங்கிய விலா எலும்பொன்றினால் பெண்ணைப் படைத்ததன் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் **இரண்டு** எழுதுக.

(ii) நாம் அனைவரும் நேரிய வழியில் செல்ல இறைவன் அறிவுரை வழங்கும் வழிகள் **மூன்றினை** எழுதுக.

(iii) தொடக்க நூலில் குறிப்பிடப்படும் படைப்பின் கதைகள் தொடர்பில் நீர் விளங்கிக் கொள்ளும் விடயங்கள் **ஐந்தினை** விபரிக்குக.

**6.** (i) திருமுழுக்கின் போது "கிறிசம்" (chrism) தைலத்தால் அபிஷேகம் செய்வதன் மூலம் ஓர் கிறிஸ்தவனாக நாம் திடப்படுத்தப்படுவது எதற்காக என்பதற்கு **இரு** காரணிகள் தருக.

(ii) திருமுழுக்கின் போது பயன்படுத்தப்படும் வெண்ணிற ஆடையின் மூலம் அடையாளப்படுத்தப்படும் விடயங்கள் **மூன்றினை** எழுதுக.

(iii) உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தைப்பெறுவதற்கு ஒருவரிடத்தில் இருக்கவேண்டிய தகுதிகள் **ஐந்தினை** எழுதுக.

**7.** பின்வரும் தலைப்புக்களில் **இரண்டைத்** தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.

(i) அருளாளர் அன்னை திரேசாவின் இரக்கப் பணி

(ii) முதலாவது இறை கட்டளையின்படி வாழ்க்கை நடாத்துவோம்.

(iii) புனித வின்சன் டிபோல் சபை

(iv) ஓர் கிறிஸ்தவனாக சூழலைப் பாதுகாக்க எனது பங்களிப்பு

* * *

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# கத்தோலிக்க திருமறை II

**வினா இல. 01**

**புள்ளி : 2 x 10 = 20**

i. **திருவிவிலியத்தில் வெளிப்பாட்டு இலக்கிய நூல்கள் இரண்டினையும் குறிப்பிடுக.**

பழைய ஏற்பாடு – தானியேல்
புதிய ஏற்பாடு – திருவெளிப்பாடு (1 x 2= 02 புள்ளிகள் )

ii. **ஞான இலக்கிய நூல்கள் இரண்டினைப் பெயரிடுக.**

யோபு
திருப்பாடல்கள்
நீதிமொழிகள்
சபை உரையாளர்
இனிமைமிகு பாடல்
சாலமோனின் ஞானம்
சீராக்கின் ஞானம்

(1 x 2= 02 புள்ளிகள் )

iii. **பழைய ஏற்பாடு எரிபலிகளில் இரு வகைகளை எழுதுக.**

முழுமையான எரிபலி
நல்லுறவுப் பலி
குற்ற நீக்கப் பலி
பாவ நிவாரணப் பலி

(1 x 2= 02 புள்ளிகள் )

iv. **திருவழிபாட்டின் பிரதான பகுதிகள் இரண்டினைப் பெயரிடுக.**

- திருப்பலி
- அருளடையாளங்கள்
- திருப்புகழ்மாலை

(1 x 2= 02 புள்ளிகள் )

v. **இயேசு இறுதி இரா உணவின் போது நிறைவேற்றிய இரு செயல்களை எழுதுக.**

- நற்கருணையை ஏற்படுத்தினார்.
- குருத்துவம் என்ற அருளடையாளத்தை ஏற்படுத்தினார்.
- திருத்தூதர்களின் காலடிகளைக் கழுவினார்.
- உன்னத குருவின் வேண்டுதலினூடாக இறை தந்தையிடம் வேண்டினார்.

(1 x 2= 02 புள்ளிகள் )

vi. **பஞ்சாகமத்தைக் குறிக்கும் வேறு இரு பெயர்களை எழுதுக.**

- தோரா
- திருச்சட்ட நூல்
- நீதிச்சட்டம்
- மோசேயின் சட்டம்

(1 x 2= 02 புள்ளிகள் )


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

vii.**பாவத்தில் விழுந்த ஏவாளுக்கு இறைவன் கொடுத்த தண்டனைகள் இரண்டினை எழுதுக.**

- உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்.
- வேதனையில் நீ குழந்தையைப் பெறுவாய்.
- உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய் அவனோ உன்னை ஆள்வான்.

(1 x 2= 02 புள்ளிகள் )

viii.**சிறிய இறைவாக்கினர் இருவரைப் பெயரிடுக.**

ஒசேயா
யோவேல்
ஆமோஸ்
ஒபதியா
யோனா
மீக்கா
நாகூம்
அபக்கூக்கு
செப்பனியா
ஆகாய்
செக்கரியா
மலாக்கி

(1 x 2= 02 புள்ளிகள் )

ix.**புனித யோவான் நற்செய்தியின் அடையாளத்தைக் குறிப்பிட்டு அதன் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்தையும் எழுதுக.**

அடையாளம் - கழுகு

அதன் கருத்து
மிக ஆழமான இறையியல் கருத்துக்கள் இந் நற்செய்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(1 x 2= 02 புள்ளிகள் )

x. **தொடக்க நூல் 3 : 6 இன்படி நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் பறித்து உண்பதற்கு பெண் தன்னிடமிருந்த ஆசையை வெளிப்படுத்திக் கூறிய இரு விடயங்களை எழுதுக.**

- இந்த மரம் உண்பதற்குச் சுவையானது.
- கண்களுக்கு களிப்பூட்டுவது.
- அறிவு பெறுவதற்கு விருப்பத்தக்கது.

(1 x 2= 02 புள்ளிகள் )

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

2. நோக்கம்

இறை அழைத்தலுக்கு பதில் கொடுக்கும் முறையை ஆய்ந்தறிவர்.

**வினா இலக்கம். 02**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ = $\frac{10}{10}$

i. **வெளிப்பாட்டு இலக்கியத்தில் வரும் அடையாளங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- மிருக அடையாளங்கள் - ஆட்டுக்குட்டி - இயேசுக் கிறிஸ்து
  - அரக்கப் பாம்பு - வேதாளம்
- நிற அடையாளங்கள் - வெள்ளை, சிவப்பு, கறுப்பு, வெளிறிய நிறம்
- இலக்க அடையாளங்கள் - 4, 7, 10, 12

(1 x 2= 02 புள்ளிகள் )

ii. **வெளிப்பாட்டு இலக்கியத்தில் அடையாளங்களாகப் பயன்படுத்தப்படும் நிறக் குறியீடுகள் மூன்றை எழுதுக.**

- வெள்ளை
- சிவப்பு
- கறுப்பு
- வெளிறிய நிறம்

(1 x 3= 03 புள்ளிகள் )

iii. **புனித பேதுருவின் வாழ்க்கையிலிருந்து உமது வாழ்க்கைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஐந்தினை விபரிக்குக.**

- அச்சமின்றி கிறிஸ்து இயேசுவுக்கு சான்று பகர்தல்
- துணிவுடன் சவால்களுக்கு முகங்கொடுத்தல்
- ஆழமான விசுவாச வாழ்வு
- சமுதாயத்தில் சிறந்த முன்மாதிரிகையான தலைவராகச் செயற்படல்
- விசுவாசத்தில் தளர்ச்சியடைந்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தல்
- செய்த பாவங்களுக்காக உண்மையாக மனம் வருந்துதல்

(1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய கருத்துக்கள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

3. நோக்கம்

அருளடையாளங்கள் மூலம் கிறிஸ்து நாதருடன் இணைந்து முழுமையான கிறிஸ்தவ வாழ்விற்கு சான்று பகர்வர்.

**வினா இலக்கம். 03**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ = $\frac{10}{10}$

i. **திவ்விய நற்கருணை தொடர்பான முன்னடையாளங்கள் இரண்டு எழுதுக.**

- மெல்கிசெதேக் பலி (தொ.நூ 14 : 18 – 20)
- மன்னா உணவு (வி.ப 16)
- புளியாத அப்பத்தை உண்ணுதலும் கிண்ணத்தில் அருந்துதலும் (வி.ப 12 : 15 – 20)
- அப்பங்களைப் பருகச் செய்த அருங்குறி (மத் 14 : 15 – 21) (மார் 6 : 35 – 44) (லூக் 14 : 18 – 20) (யோவான் 6 : 35 )

(1 x 2= 02 புள்ளிகள் )

(இவற்றில் 2 விடைகள் இருப்பின் 2 புள்ளிகள் வழங்கவும்.)

ii. **திருப்பலி நிறைவேற்றுவதன் பிரதான நோக்கங்கள் மூன்றினை எழுதுக.**

- இறைவனுக்கு ஆராதனை செய்தல்.
- இறைவனுக்கு நன்றி கூறுதல்.
- பாவங்களுக்குப் பரிகாரம் செய்தல்.
- ஆன்ம உடல் தேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- நற்கருணை விருந்தில் பங்கேற்றல்.

(1 x 3= 03 புள்ளிகள் )

iii. **நற்கருணை உணவினாலும், இறை வார்த்தையாலும் போஷிக்கப்படும் ஒரு குடும்பத்தில் தமது பிள்ளைகள் மட்டில் பெற்றோருக்குள்ள கடமைகள் ஐந்தினை விபரிக்குக.**

- பிள்ளைகளை அன்பு செய்வது.
- பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது.
- நற்பண்பும் அறிவும் உள்ள பிள்ளைகளாக வளர்ப்பது.
- கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு அனுப்பி கற்பிப்பது.
- தினமும் செபிப்பதும் செபத்தின் மூலம் வாழ்க்கையை கட்டியெழுப்ப கற்றுக் கொடுத்தல்.
- தவறுகளைத் திருத்துவது.
- பிள்ளைகளுக்குச் சிறந்த முன்மாதிரியாக இருப்பது.
- சமூகத்திற்குப் பொருத்தமான கல்வியை வழங்குவது.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இது போன்ற கருத்துக்களை உள்ளடக்கிய ஐந்து விடயங்கள் இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

4. நோக்கம்

திருவழிபாட்டில் செபத்தினால் ஊட்டம் பெற்று மனிதன் இறைவனோடு ஆழ்ந்த உறவைக் கட்டி எழுப்புவர்.

**வினா இலக்கம். 04**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ = $\frac{10}{10}$

i. **பரிசுத்த வாரத்தில் பிரதான திருவழிபாட்டு நாட்கள் இரண்டினை எழுதுக.**

- குருத்தோலை ஞாயிறு
- பெரிய வியாழன்
- பெரிய வெள்ளி
- அல்லேலுயா சனிக்கிழமை (1 x 2= 02 புள்ளிகள் )

ii. **நத்தார் காலத்தில் கொண்டாடப்படும் பிரதான திருவிழாக்கள் மூன்றினைப் பெயரிடுக.**

- மார்கழி 25 கிறிஸ்துவின் பிறப்புப் பெருவிழா
- மார்கழி 25 இன் பின்வரும் ஞாயிறு திருக்குடும்பப் பெருவிழா
- தை 1 இறை அன்னையாம் மரியாவின் பெருவிழா
- ஜனவரி 02 ஆம் திகதிக்கு பின் வரும் ஞாயிறு திருக்காட்சிப் பெருவிழா

(1 x 3= 03 புள்ளிகள் )

iii. **ஞாயிறு தினத்தைப் புனிதமாக அனுசரிக்க உம்மால் நிறைவேற்றப்படவேண்டிய செயல்கள் ஐந்தினை விபரிக்குக.**

- ஞாயிறு திருப்பலியில் தூய்மையாகப் பங்கேற்றல்.
- ஏனைய நாட்களை விட கூடுதலாக செய்ததில் ஈடுபடுதல்.
- பெற்றோருக்கு உதவி செய்தல்.
- ஞாயிறு தினத்தில் செபிப்பதும், ஓய்வாக இருப்பதும் முக்கியம்.
- பக்திச் சபைகளில் பங்கேற்றல்.
- ஆன்ம, உடல் ஆயத்தத்துடன் பங்குபற்றல்.
- செபங்களிலும் பாடல்களிலும் திருப்பலியில் கலந்து கொள்ளுதல்.
- குடும்பமாக ஒன்று சேர்ந்து செபமாலை செபித்தல்.
- திருவிவிலியம் வாசித்து தியானித்தல்.
- கடந்த வாரம் தாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டு புதிய வாரத்தைத் தூய்மையாக அனுசரிக்க வேண்டுதல்.
- ஆன்மா சார்ந்த, உடல் சார்ந்த இரக்க செயல்களில் ஈடுபடல்.
- பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் அதிகமான உதவிகளைச் செய்தல்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய கருத்துக்கள் 5 இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

5. நோக்கம்

மனிதத்துவத்தின் மாண்பைப் பாதுகாத்து, ஆசைக்கு அடிமைப்படாது சரியான தீர்மானம் எடுப்பர்.

**வினா இலக்கம் - 05**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ $= \frac{10}{10}$

i. **ஆணின் இதயத்தினை நெருங்கிய விலா எலும்பொன்றினால் பெண்ணைப் படைத்ததன் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் இரண்டு எழுதுக.**

- பெண் ஆணின் அடிமையோ அல்லது அவனை விட உயர்ந்தவளோ அல்ல.
- அவர்களின் உறவு அன்பை அடிப்படையாகக் கொண்டது.
- பெண் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் அவள் இன்றி அவனும் அவன் இன்றி அவளும் முழுமையடைவதில்லை.
- இந்த முழுமையின் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மதித்து அன்பு செய்து திருமண வாழ்வை வாழ உறுதி பூணல் வேண்டும்.
- மனித மாண்பைப் பேணி ஆண் பெண் வேறுபாட்டுக்கு மதிப்பளித்து மரியாதையுடன் வாழ்தல் வேண்டும்.

(1 x 2= 02 புள்ளிகள் )

ii. **நாம் அனைவரும் நேரிய வழியில் செல்ல இறைவன் அறிவுரை வழங்கும் வழிகள் மூன்றினை எழுதுக.**

- மனச்சான்று
- பெற்றோர், பெரியோர்
- ஆசிரியர்கள்
- சமயத் தலைவர்கள்
- பத்துக் கட்டளைகள்

(1 x 3= 03 புள்ளிகள் )

iii. **தொடக்க நூலில் குறிப்பிடப்படும் படைப்பின் கதைகள் தொடர்பில் நீர் விளங்கிக் கொள்ளும் விடயங்கள் ஐந்தினை விபரிக்குக.**

- இறைவனே இவ்வுலகைப் படைத்தார்.
- இறைவன் படைப்பைப் பாதுகாக்கிறார்.
- இறைவனின் படைப்பு அழகானது வியப்புக்குரியது.
- மனிதனே பாவத்திற்கு காரணம்.
- பாவத்தை இறைவன் வெறுக்கிறார், கண்டிக்கிறார்.
- இறைவனின் அன்பு எல்லையற்றது.
- பாவத்திற்கு இறைவனின் தண்டனை கிடைக்கிறது.
- ஓய்வு நாளைத் தூய்மையாக அனுசரிப்பது.
- படைப்புகளில் மனிதன் மேன்மையானவன்.
- கணவன் மனைவி ஒருவரை ஒருவர் மதித்து அன்பு செய்து வாழ்தல் வேண்டும்.
- பெண் மனிதனுக்கு துணைவியாக இருக்கின்றாள்.
- அறிவு சுயாதீனத்தின் படி நாம் செயற்பட வேண்டும்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய கருத்துக்கள் 5 இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. நோக்கம்

உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தைப் பெறுவதற்கு ஒருவரிடத்தில் இருக்க வேண்டிய தகுதிகள் ஐந்தினை எழுதுக.

**வினா இலக்கம் - 06**

**புள்ளி:** i. $\frac{2}{2}$ ii. $\frac{3}{3}$ iii. $\frac{5}{5}$ $= \frac{10}{10}$

i. **திருமுழுக்கின் போது "கிறிசம் (Chrism) தைலத்தால் அபிஷேகம் செய்வதன் மூலம் ஓர் கிறிஸ்தவனாக நாம் திடப்படுத்தப்படுவது எதற்காக என்பதற்கு இரு காரணிகள் தருக.**

- தனது நம்பிக்கைக்கு ஏற்ப வாழுவதற்கும்
- தனது நம்பிக்கைக்கு எதிராக எழும் சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கும்
- குருவாகவும் அரசராகவும் பணிபுரிவதற்கும்

(1 x 2= 02 புள்ளிகள் )

ii. **திருமுழுக்கின் போது பயன்படுத்தப்படும் வெண்ணிற ஆடையின் மூலம் அடையாளப்படுத்தப்படும் விடயங்கள் மூன்றினை எழுதுக.**

- வெள்ளை நிறம் தூய்மையின் அடையாளமாகும்.
- ஆன்மீகத்தூய்மை அடையாளப்படுத்தப்படுகின்றது.
- அருள் வாழ்வுக்கு உயர்த்தப்படுகிறது.
- இயேசு தோற்றம் மாறிய போது அவர் அணிந்திருந்த ஆடை வெண்மையானது இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது.
- இயேசுவின் உயிர்ப்பின் போது அணிந்திருந்த பிரகாசமான ஆடை

(1 x 3= 03 புள்ளிகள் )

(இவற்றுள் ஏதாவது மூன்று விடயங்கள் எழுதியிருப்பின் புள்ளிகள் 03 வழங்கவும்.)

iii. **உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தைப் பெறுவதற்கு ஒருவரிடத்தில் இருக்க வேண்டிய தகுதிகள் ஐந்தினை எழுதுக.**

- திருமுழுக்குப் பெற்றிருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட வயது நிறைவடைந்து இருக்க வேண்டும். (14 வயது)
- அருள் நிலையில் வாழுதல். (ஒப்புரவு அருளடையாளம் பெற்றிருக்க வேண்டும்.)
- முறையான மறை அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.
- உறுதிப்பூசுதல் பெற முழு விருப்பம் வேண்டும்.
- கிறிஸ்துவின் படை வீரனாக ஆயத்தம் செய்தல்.
- நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும். (திருமுழுக்கு வார்த்தைப் பாட்டை புதுப்பித்தல்)

(1 x 5= 05 புள்ளிகள் )

(இது போன்ற விடைகள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

7. பின்வரும் தலைப்புக்களில் இரண்டைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

நோக்கம்

நன்மை கருதி தியாகத்துடன் செயற்படுவர்.

**வினா இலக்கம். 07**

i. **அருளாளர் அன்னை திரேசாவின் இரக்கப் பணி**

**புள்ளி:** $\frac{5}{5}$

- கல்கத்தாவில் ஆதரவற்ற நோயாளிகள், ஏழைகள், அனாதைகள் போன்ற பிள்ளைகளுக்குப் பணிபுரிய 1948.08.17ல் அன்பின் கன்னியர் சபையை ஆரம்பித்து கல்கத்தாவை மத்திய நிலையமாக்கிக் கொண்டார்.
- உயிரிழக்கும் நிலையில் வீதியின் இருபக்கமும் விழுந்து கிடந்தவர்கள், மனித நேயத்துடனும் பிறரின் பாதுகாப்புடனும் உதவியுடனும் இறப்பதற்கு வழி சமைத்துக் கொடுத்தார்.
- வீதியோரங்களில் இருந்த பிள்ளைகளுக்கு பாடசாலையொன்றை ஆரம்பித்தார்.
- அசுத்தமான சூழலில் இருந்து வரும் பிள்ளைகளை அன்புடன் வரவேற்று அவர்களின் உடலையும் ஆடைகளையும் சுத்தம் செய்து உணவளித்து கல்வி புகட்டினார்.
- வீடு ஒன்றைக் கேட்டு வாங்கி எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களைப் பராமரித்தார்.
- சேரிவாழ் மக்களின் வாழ்க்கை தொடர்பாக விசேட கவனம் செலுத்தினார்.
- கைவிடப்பட்ட மக்களுக்கு உதவிபுரிய விரும்பினார்.
- நோயாளர்களைப் பராமரிக்க வேறு அருட் சகோதரிகளை நியமித்தார்.
- சாதி, மதம் பாராமல் சேரிவாழ் கைவிடப்பட்டோர் அநாதைகள், நோயாளிகள், மரணத்தறுவாயில் உள்ளவர்களுக்கு அன்பையும் அரவணைப்பையும் அளித்தார்.
- கிறிஸ்துவின் கல்வாரிப் பலிக்கு எப்போதும் சான்று பகர்ந்தார்.
- இவரது இரக்கப் பணிகள் காரணமாக "ஏழைகளுக்கு உதவும் தூதர்" "எம்முடன் வாழும் புனிதை" என்ற விருதுகளைப் பெற்றார்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இது போன்ற இரக்கப்பணிகள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

நோக்கம்

முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் கடவுளை அன்பு செய்வார்.

ii. முதலாவது இறை கட்டளையின் படி வாழ்க்கை நடத்துவோம்.

**புள்ளி:** $\frac{5}{5}$

- இறைவன் அளித்த பத்துக் கட்டளைகளில் முதலாவது கட்டளை ஒரே இறைவனை முழுமனதுடனே ஆராதிப்பாயாக என்பதாகும்.
- நம்மைப் படைத்தவரும், நம்மைப் பாதுகாத்து வருபவருமாகிய ஒரே இறைவனை மட்டும் நாம் விசுவசித்து அன்பு செய்ய வேண்டும் என்ற அழைப்பினையே முதலாவது இறைகட்டளை நமக்கு விடுக்கிறது.
- மனிதனுடைய முதற் கடமை இறைவனை விசுவசிப்பதும், அந்த விசுவாசத்திற்கு உறுதியான விசுவாச வாழ்க்கை மூலம் சான்று பகருவதுமாகும்.
- இறைவன் மீதுள்ள விசுவாசத்தை வளர்த்துக் கொள்ள செபம், தியானம், திருப்பலியில் பங்குபற்றுதல், திருவிவிலியத்தை வாசித்தல் என்பன நமக்கு உதவியாகும்.
- இறை உறவு நம்மில் வளர வளர நாம் இறைவனில் தங்கி வாழும் போது தீய சக்திகள் நம்மிடமிருந்து தூர அகன்று விடுகின்றன. அவற்றை எதிர்த்துப் போராட நமக்கு சக்தியும் கிடைக்கும்.
- முதலாவது இறைகட்டளையின் படி வாழ்க்கை நடாத்துவதெனில் நாம் இறைவனின் விசுவாசமுள்ள பிள்ளைகளாக அவருடைய படைப்புக்களைப் பாதுகாத்து, விருத்தி செய்யும் பிள்ளைகளாக விளங்க வேண்டும்.
- இறைவனுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளை நேர்த்திகளைத் தவறாது நிறைவேற்ற வேண்டும்.
- முதலாவது இறைகட்டளையின் படி நாம் ஒரே இறைவனை அன்பு செய்து வாழுபவர்களாக, நமது அயலாரையும் அன்பு செய்து அவர்களின் தேவைகளில் உதவி அவர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும்.
- முதலாவது இறைகட்டளைக்கு எதிரான செயல்களான பில்லி, சூனியம், விக்கிரக ஆராதனை என்பவற்றிலிருந்து நாம் விலகி வாழ வேண்டும்.
- இறை மக்களின் கூட்டமாகிய திருச்சபையின் உறுப்பினர்களாகிய நாம் இறைவனுக்குக் கீழ்படிவது போல் திருச்சபையின் தலைவர்களுக்குக் கீழ்படிந்து திருச்சபையின் போதனைகளை ஏற்று அதன்படி வாழ வேண்டும்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இவ்வாறான விடயங்கள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

நோக்கம்

பொதுநிலைரயினர் மறைத்தூதுப் பணியில் இணைந்து செயற்படுவர்.

iii. புனித வின்சன் டி போல் சபை

புள்ளி : $\frac{5}{5}$

**குறிக்கோள்**

- இனம், மதம், சாதி, நிறம் ஆகிய பேதங்களைத் தவிர்த்து அயலானுக்கு உதவும் இரக்கப்பணி மூலம் தனது கிறிஸ்தவ வாழ்வை வெளிப்படுத்துவதற்கு வழி வகுத்தல்.
- இதனைச் சமூக சேவையாக மட்டும் கருதாது இரக்கத்தின் செயலாக நினைத்துச் செயற்படல்.

**பணிகள்**

- துன்பப்படும் அல்லற்படும் மக்களிடையே வேதனைகளைக் கண்டு அதனை தமதாக்கிக் கொண்டு அவர்கள் மத்தியில் மேற்கொள்ளும் பணிகள்.
- அடுத்தவர்களுக்கு உதவுதல், தனது கரிசனையையும் நட்பையும் வெளிப்படுத்தல்.
- தனது ஆற்றல்களையும் திறமைகளையும் மற்றவர்களோடு பகிரல்.
- வயோதிப இல்லங்களை நடாத்துதல்.
- பாலர் பாடசாலையை நடாத்தல்.
- சிகிச்சை முகாம்களை நடாத்தல்.

மேலான பணிகளைக் மேற்கொண்டு அன்பு காட்டும் சர்வதேச தொடர்புடைய ஓர் திட்டமிடப்பட்ட பொது நிலையினரின் அப்போதலிக்க பக்திச் சபையாகும்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இத்தகைய விடயங்கள் ஐந்து எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

நோக்கம்

சூழலைப் பாதுகாத்து, விருத்தி செய்ய முற்படுவர்.

**புள்ளி :** $\frac{5}{5}$

iv. ஓர் கிறிஸ்தவனாக சூழலைப் பாதுகாக்க எனது பங்களிப்பு

- இயற்கையை அன்பு செய்து மதித்தல்.
- நிலத்தின் வளத்தைப் பாதுகாத்தல்.
- வாழும் சூழலை அழகுபடுத்தல்.
- சூழல் சமநிலையைப் பேணல்.
- சூழல் மாசடைவதைத் தவிர்க்க உதவும் வழிகளைப் பின்பற்றுதல்.
- எளிமையான வாழ்க்கை முறைக்குப் பழகுதல்.
- எதிர்காலப் பரம்பரைக்காக வளங்களைப் பாதுகாத்தல்.
- சூழலை அழிப்பவர்களுக்கு அதனால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறுதல்.
- பௌதிக வளங்களை விருத்தி செய்து சுயநலமின்றிப் பகிர்ந்து கொள்ளுதல்.
- இயற்கை வளங்கள் அனைவரதும் உரிமை ஆகையால் அதனைச் சுயநலத்துடன் அபகரித்துக் கொள்ள முற்படாதிருத்தல்.

(1 x 5= 05 புள்ளிகள் )

(இவற்றுள் ஐந்து கருத்துக்கள் இருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.)

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/